**(DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL SESSIONS JUDGE, CHENNAI.

**Case No. : CRLA.No.365/2023.** **Date: 05.03.2026**

PW:1

Name : திரு. K.N.குப்பன்.

Father's Name :

Village :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of March 2026.

**எதிரி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை :–**

வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.13 ஆவணங்கள் வங்கி காசோலை திரும்ப வந்ததற்கு வங்கியிலிருந்து அளித்த ரசீது ஆகும். மேற்சொன்ன 3 ஆவணங்களிலும் வங்கியில் வழங்கிய அதிகாரியின் கையொழுத்தோ அல்லது வங்கியின் முத்திரையோ கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன ஆவணங்கள் எனக்கு எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 26.09.2018 அன்று வழங்கப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தில் நான் என்னுடைய புகாரை 29.11.2018 அன்று தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த ஆவண பட்டியல் ஆவணத்தில் கூறவில்லை என்றால் நீதிமன்றத்தில் அது குறித்து கேட்கவில்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து நான் கூறவில்லை என்றால் நீதிமன்றத்தில் கேட்கவில்லை. வா.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்களில் KK Agency என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த

நிறுவனம் யாரால் நடத்தப்படுகிறது மற்றும் கூட்டுப்பங்கு நிறுவனமா அல்லது தனிப்பட்ட நபருக்கு சொந்தமானதா என கூறப்படவில்லை என்றால் KK Agency என்பது வங்கியிலிருந்து தட்டச்சு செய்துள்ளனர். வா.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் விசாரணை நீதிமன்றத்தில் எதிரி தரப்பில் மேற்சொன்ன ஆவணத்தை கேட்கவில்லை. வா.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்களை நான் காலதாமதாக தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் எனக்கு நீண்ட நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. வழக்கறிஞர் சொன்னதும் தாக்கல் செய்தேன். விசாரணை நீதிமன்றத்தில் புகார் மனுவை காலதாமத மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது தவறு. நான் சட்ட பூர்வமான அறிவிப்பை உரிய காலத்திற்குள் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்கள் வங்கியிலிருந்து எனக்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.11 முதல் 13 ஆவணங்கள் உண்மைக்கு மாறாக என்னால் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்தவித தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை என்றும், அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

**மறுவிசாரணை :** இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Date : 05.03.2026

I Additional Judge